# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No.107 of 2022

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.கௌரி |
| கணவர் பெயர் | : | திரு. மணிவண்ணன் |
| பி.வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 17.10.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பி.வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

**வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

அசல் வழக்கு 107/2022க்கு எதிராக நான் அசல் வழக்கு எண்.17/2023ஐ தாக்கல் செய்தேன். மேற்படி அசல் வழக்கு 107/2022க்கு எதிராக அசல் வழக்கு 17/2023 தாக்கல் செய்த விபரத்தை எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேன். 01.09.2021-ல் இறந்த மணிவண்ணன் வாரிசுகளாக எங்களை அறிவிக்க கோரி கணினி மூலம் விண்ணப்பம் செய்தேன்.

2. அதன்பேரில் என்னை நீதிமன்றம் அணுகுமாறு வருவாய்த்துறை அலுவலர்கள் கூறியதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். 2021-ம் ஆண்டு எனது வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவுடன் ஏன் நீதிமன்றம் நாடாமல் இரண்டு வருடங்கள் கழித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அந்த காலகட்டத்தில் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய தோன்றவில்லை.

3. நான் மணிவண்ணனை 03.02.2006-ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டேன். 02.02.2007-அன்று திருமணத்தின் பயனாக ஒரு பெண் குழந்தையும், 19.07.2009-அன்று ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. திருமணத்தின்போது எனது கணவர் மணிவண்ணன் விவசாயத்தொழில் செய்து வந்தார், அதைத்தவிர வேறு எந்த தொழிலும் அவர் செய்யவில்லை. 04.06.2021-அன்று எனது கணவர் மணிவண்ணன் இறந்துவிட்டார். அந்த சமயத்தில் தனது அக்கா வீட்டு அருகே கோழிப்பண்ணை நடத்தி வந்தார்.

4. 2007-ம் ஆண்டுமுதல் 2021-ம் ஆண்டு வரை அவர் கோழிப்பண்ணை நடத்தி வந்தார். எனது கணவர் மணிவண்ணன் மோட்டார் மெக்கானிக் வேலையும் செய்துவந்தார். வாதி மீனா மற்றும் மணிவண்ணன் திருமணம் செய்து கொண்ட விபரம் எனக்குத் தெரியாது. 19.08.2002அன்று மேற்படி வாதி மீனா மற்றும் மணிவண்ணன் திருமணம் பயனாக இரண்டாம் வாதி பிறந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 22.12.2005 அனற் மேற்படி வாதி மீனா மற்றும் மணிவண்ணன் திருமணம் பயனாக மூன்றாம் வாதி பிறந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

5. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் இறந்த மணிவண்ணன் என்னை சட்டப்பூர்வமான மனைவியாக ஏற்று வாழ்ந்து வந்தார் என்று கூறியுள்ளேன். ஏனென்றால் எங்கள் திருமணம் பதிவு செய்யப்பட்டது. அதனால் அவ்வாறு கூறியுள்ளேன். எனக்கும் மணிவண்ணன் என்பவருக்கும் நடந்ததாக சொல்லப்படும் திருமணம் தமிழ்நாட்டில் நடந்ததாக சொல்லப்பட்டும் மேலும் நாங்கள் இருவரும் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாக சொல்லப்பட்டும் இருக்கும் நிலையில் எங்களது திருமண பதிவு செய்யப்பட்டதாக அசல் வழக்கு எண்.17/2023-ல் குறியீடு செய்யப்பட்ட எனது தரப்பு சான்றாவணமான வா.த.சா.ஆ-2 மற்றும் இந்த வழக்கில் பி.வா.த.சா.ஆ-2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள திருமண பதிவு சான்றிதழ்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

6. பி.வா.த.சா.ஆ-3ன்படி 2010ம் ஆண்டுதான் மணிவண்ணன் மற்றும் எனக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டதாக காட்டுகிறது என்றால் சரிதான். வா.த.சா.ஆ-6ன்படி ஏற்கனவே மணிவண்ணன் மற்றும் வாதிகளின் பெயரில் குடும்ப அட்டை இருப்பதால் வழக்கிற்காக நான் பிரதிவாதி சான்றாவனம் 3ஐ தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 01.02.2021-எனது கணவர் மணிவண்ணனை மருத்துவமனையில் அனுமதித்து அவர் 4 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார். அதற்கு ரூபாய் இரண்டு லட்சம் செலவானதாக நான் வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

7. மணிவண்ணன் சிகிச்சை செலவுகள் அனைத்தையும் வாதிதான் செலவு செய்து பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் தான் செலவு செய்தேன். மணிவண்ணன் இறந்தபிறகு வாதியை தாக்கிவிட்டு உடலை நான் என் ஊருக்கு எடுத்துச்சென்றேன்

என்றால் சரியல்ல. மணிவண்ணன் என்னுடன்தான் வாழ்ந்து வந்தார் அதனால் நான் முறைப்படி அவரது உடலை மருத்துவமனையிலிருந்து பெற்றுக்கொண்டேன்.

8. வா.த.சா.ஆ-1 மற்றும் பி.வா.த.சா.ஆ-1 கணினி மூலம் தரவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவை இரண்டும் ஒரே ஆவணங்கள்தான். இரண்டும் மணிவண்ணன் என்பவரது இறப்பு சான்றிதழ்கள்தான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.த.சா.ஆ-1 வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பிறகு இந்த வழக்கிற்காக மேற்படி வா.த.சா.ஆ-1ஐ மீண்டும் இந்த வழக்கில் நான் பி.வா.த.சா.ஆ-1ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. பி.வா.த.சா.ஆ-7 திருநாராயணபலி பத்திரிக்கையில பொதுவாக உறவினர்கள் பெயர்கள் எதையும் சொல்லமாட்டார்கள் என்றாலும், மேற்படி ஆவணத்தில் எனது தரப்பு உறவினர்கள் பெயர்களை சொல்லி இந்த வழக்கிற்காக ஒரே ஒரு பத்திரிக்கை மட்டும் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குல வழக்கப்படி உறவினர்கள் பெயரையும் பத்திரிக்கையில் சொல்லுவோம். அவ்வாறு ஒரே ஒரு பத்திரிக்கை மட்டும் அச்சடித்ததால்தான் எனது வழக்கில் மேற்படி ஆவணத்தின் பிரதியை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கில் நாான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் பொய்யானவை என்றால் சரியல்ல. வாதிதான் இறந்துபோன மணிவண்ணனுக்கு முதல் மனைவி என்றாலும், அவர் உயிருடன் இருக்கும்போது நான் மணிவண்ணனை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு வாதி யார் என்றே தெரியாது. வாதிதான் முதல் மனைவி என்ற விபரம் எனக்கு ஏற்கனவே தெரிந்ததால்தான் 2021-ம் ஆண்டு உடனடியாக நான் நீதிமன்றத்தை நாடாமல் காலதாமதமாக 2023ம் ஆண்டு வாதி தாக்கல் செய்த வழக்கிற்கு பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்துபோன மணிவண்ணன் நடத்தியை கோழிப்பண்ணையை இரண்டாம் வாதிதான் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல.

11. எனக்கு கொரானோ நோய் தொற்று ஏற்பட்டதற்கான சான்று எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மணிவண்ணனுக்கு கொரானோ நோய் தொற்று ஏற்பட்டபோது வாதிதான் அவரைப் பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல

நான்தான் அவரைப் பார்த்துக்கொண்டேன். மணிவண்ணன் இறந்ததற்காக அரசு தரப்பில் இருந்து நஷ்டயீடாக ரூ.600000/-ஐ நான் தான் பெற்றேன். மேற்படி விபரத்திற்கு ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் குடியிருக்கும் ஊருக்கு வட்டாட்சியர் அலுவலகம் பண்ருட்டியில் உள்ளது. அவ்வாறு பண்ருட்டியில் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் கடலூரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது இந்த நீதிமன்ற வரம்பிற்கு அப்பாற்பட்டது என்பதால் வழக்கு தள்ளபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொய் ஆவணங்கள் தாக்கல் செய்து பொய்யான சங்கதிகளை நான் கூறியுள்ளதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால சரியல்ல.